https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சிலப்பதிகாரத்தில் கண்ணகிவழிபாடும் கொடுங்கலூர் பகவதியம்மனும்

**முனைவர் அ. மகபூபு**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி 642001
தமிழ்நாடு, இந்தியா.
Orcid:https://orcid.org/0000-0003-4761-4707

## ஆய்வுச்சுருக்கம்

பழந்தமிழிலக்கியத்தில் தாய்த்தெய்வம்வழிபாட்டைப் பற்றிச் சில செய்திகள் காணப் படுகின்றன. சங்க இலக்கியத்திலும், மணிமேகலை, சிலப்பதிகாரத்திலும் தாய்த் தெய்வத்தைப் பற்றிப் பல முக்கிய குறிப்புகள் கூறப்பட்டுள்ளன. இந்தச் செய்திகளை ஆராய்ந்தால் மூன்று வகையான தாய்த்தெய்வங்கள் தமிழிலக்கியத்தில் கூறப்படுவதாகத் தெரிகின்றது. பழந்தமிழர்களின் தாய்த் தெய்வம் கொற்றவை என்பது தெளிவாகத் தெரிகின்றது. அடுத்து இந்திய ஆரியரது கலப்பால் (Indo-Aryan) தோன்றிய தாய்த்தெய்வமான காளி பற்றிய செய்திகளையும் இலக்கியத்தில் காண்கிறோம். இவை மட்டுமின்றித் திராவிடருக்கும் முன்னரே இந்தியாவில் குடியிருந்த பழங்குடி மக்களான Austric பழங்குடி இனத்தாரிடையே வழங்கிய தாய்த்தெய்வத்தைப் பற்றிய செய்திகளையும் பழந்தமிழிலக்கியத்தில் காணமுடிகிறது.

## முன்னுரை

இளங்கோவடிகள் கண்ணகியை மானிடப்பெண்ணாகப் படைத்துத் தெய்வமாக்கினார். ஆனால் வாய்மொழிக் கதைகள் கண்ணகியைக் காளியின் அவதாரமாக்கின. காளி கண்ணகியாகப் பிறந்து பல வியத்தகு செயல்களைச் செய்யினும் அவற்றைக் காளியின் செயல்களாகக் கொள்ளவில்லை. மண்ணுலகில் வாழ்ந்த பெண்ணொருத்தியின் பத்தினிச் செயல்களாகவே கூறப்பட்டுள்ளது. இளங்கோவடிகள் தன் காலத்தில் இருந்த பல்வேறு சமயங்களைப் பற்றிக் குறித்துள்ளார். ஆயினும் பத்தினி வழிபாடு என்னும் புதிய சமயத்தை முதன்முதலாக அவரே அறிமுகப்படுத்துவதாக மற்றொரு சிறப்பும் கண்ணகிக்கு உள்ளது.

## தாய்த்தெய்வ வழிபாட்டுமரபு

தாய்த்தெய்வத்தைத் தாயாகவும் கன்னியாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப் பழங்காலத்திலிருந்தே மரபாக உள்ளது. அவளை எல்லோரையும் பெற்ற தாயாகக் கருதுவதும் அழியாக் கன்னியாகக் கருதுவதும் சுமேரியா, எகிப்து, அசீரியா. இந்தியா ஆகிய நாடுகளின் பழைய நாகரிகங்களில் காணப்படுகின்றது. தமிழில் மோடி என்ற தாய்த்தெய்வப் பெயரில் எல்லோரையும் பெற்ற தாய் என்ற கருத்து காணப்படுகின்றது. மோடு என்றால் வயிறு என்று பொருள். மோடு என்பதற்கு எல்லோரையும் பெற்ற வயிறு என்று பெரும்பாணாற்றுப்

படையில் (வரி 458) நச்சினார்க்கினியர் கூறியுள்ளது, கூறிப்பிடத்தக்கது.

கன்னித் தெய்வம் என்ற கருத்தும் பழங் காலத்தது என்றே தெரிகின்றது. ஆண் உறவின்றிக் கன்னியாகவே எல்லோரையும் தானே பெற்ற தாய் (Virgin Mother Goodness) என்று கருதப்படுவாள். 'அகிலாண்டகோடி ஈன்ற அன்னையே, பின்னையும் கன்னியென மறை பேசும்' என்று தாயுமானவர் கூறியிருப் பதிலிருந்து தாய்த்தெய்வத்தையே கன்னித் தெய்வமாகக் கருதுவது தெளிவாகின்றது. “உலக முழுதீன்ற பெருங்கன்னி” என்று திருவாரூர் புராணம் கூறுகின்றது. கன்னியா குமரித் தெய்வம் ஒரு தாய்த் தெய்வமென்பது தெரிந்ததுதான், காவிரி, கங்கை, சரஸ்வதி, யமுனை ஆகிய ஆறுகளையெல்லாம் பெண் தெய்வங்களாகவும் தாய்த் தெய்வமாகவும் கருதுவது பண்டை இந்தியப் பண்பாட்டு மரபாகும். குமரியை ஓர் ஆறாகவும், அதன் துறையைச் சிறப்பு வாய்ந்ததாகப் பண்டைக் காலத்தில் கருதினர்.

## பத்தினி வழிபாடு

சிலப்பதிகாரத்தில் கண்ணகி சாதாரண பெண்ணாகத் தன் கணவன் செய்யும் தவறுகளைக் கூட தட்டிக்கேட்காத பெண்ணாக இருப்பவள் தன் கணவனுடன் துன்பத்தில் பங்குகொள்ள மதுரைக்கு உடன் செல்கிறாள். ஆனால் சங்க காலத்தில் பெண்கள் ஆண்களுடன் செல்லாதநிலையில் இன்றுபோல் அன்றே கண்ணகி உடன் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**வினையே ஆடவர்க்குயிரே வாள்நுதல்**
**மகளிர்க்கு ஆடவர் உயிர்** (குறுந்-பா:135 )

என்ற குறுந்தொகை வரிகளின்படி சங்க காலப் பெண்கள் ஆண்களுடன், செல்வதி ல்லை. அவர்கள் அனைவரும் கணவரின் இன்பத்தில் பங்கு பெற்றனர். ஆனால் கணவரின் துன்பத்தில் பங்கு பெறுவதாகக் காட்டப்பெறவில்லை. பொருள் ஈட்டச் சென்ற தலைவனுடன் பாலை வழியில் செல்லவில்லை. கண்ணகியோ கணவனின் துன்பத்தில் பங்கு பெறச் செல்கிறாள். இதனால்

**இணைமலர்ச் சீறடி இனைந்தனள் வருந்திக்**
**கணவனோ டிருந்த மணமலி கூந்தலை**
**இவளோ, கொங்கச் செல்வி குடமலை**
**யாட்டி,**
**தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து**
**ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய**
**திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்பப்**
(சிலம்பு-வேட்:45-50)

எனச் சாலினி என்ற தெய்வம் கண்ணகியை வாழ்த்துகிறது. அருகனைத் தவிர வேறொரு வரை ஏத்தாத கவுந்தியடிகளோ, 'கற்புக்கூம் பூண்ட இத்தெய்வமல்லது பொற்புடைத் தெய்வம்தான் கண்டதில்லை" என்று பாராட்டுகிறார்.

**வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது**
**நீணில வேந்தர் கொற்றம் சிதையாது**
**பத்தினிப் பெண்டிர் இருந்தநா டென்னும்**
**அத்தகு நல்லுரை அறியா யோநீ"**
(சிலம்பு-அடைக் :145-148)

என்ற வரிகளில் கண்ணகியை முதன் முதலாகப் பத்தினி என்று உலகிற்கு இளங்கோவடிகள் அறிமுகப்படுத்துகிறார். 'தமிழிலக்கியத்தில் முதல் முதலாகப் பத்தினி என்ற சொல் ஆளப்படுகிறது" என்கிறார் முனைவர் சாரதா இராசகோபாலன் (கண்ணகி வழிபாடு பக். 279) என்பதின் மூலம் அறியமுடிகிறது.

பத்தினி என்ற சொல்லின் பொருள் பத்தினி என்ற சொல் வடமொழியிலிருந்து தமிழில் வந்துள்ளது. பத்தினி என்ற சொல்லிற்கு வடமொழி ஆங்கில அகராதி, 'மனைக்கு எஜமானி" (Master of the house lady (or) To Partake of the share Csri Manjer, (Sanskrit, English Dictionary,) p:582) என்று பொருள் தருகிறது. வடமொழியில் பத்தினி என்ற சொல்லிற்கு நேர் தமிழ்ச் சொல்லாகக் 'கிழத்தி" என்ற சொல் சங்க இலக்கியங்களில் ஆளப் படுகிறது. தமிழில் பத்தினி என்ற சொல்லின் நேர்ப் பொருளை வடமொழியில் உள்ள 'பதிவிரதா" என்ற சொல் தருகிறது. (Devoted and virtuous wife loyalty to the husband) மேற்கூரிய நூல் ப.592)

அக்காலத்தில் தவத்தினிரும் கற்புடை மகளிரும் நினைத்ததை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றிருந்தனர். இறைவனிடத்து ஒருமுகச் சித்தனையுடைய தவத்தினர். சாபம் கொடுக்கும் ஆற்றலையும் சாபம் நீங்கும் ஆற்றலையும் பெற்றிருந்தனர். இதைக் கவுந்தியடிகள் மூலம் அறியலாம். அவர் கண்ணகியை எள்ளி நகையாடிய பரத்தை

யையும் வறுமொழியாளனையும் முள்ளுடைக் காட்டில் முதுநரியாகெனச் சபித்ததையும் அவர்கள் முதுநரியாகிக் கூவிளி பயிற்றியதை யும் அறிய முடிகிறது. (இவ்விடம் இன்று சில பெயர்மாறுதல்களுடன் சிலப்பதிகாரத்தின் அடையாளங்களாக இன்றும் உள்ளன.

பின்னர் கண்ணகி, கோவலன் வேண்டிய தால் ஓராண்டு வருந்திய பின்னர் முந்தைய நிலையை அடைக என்று சாப நீக்கமும் செய்தார். (சிலம்பு - நாடு: 231-245)

கணவனையன்றிப் பிறரைத் தொழாத ஒருமை மகளிராக இருந்தபோது மகளிரும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளை நிகழ்த்தும் ஆற்றலைப் பெற்றனர். அப்போது அக் கற்புடைய மகளிர் 'பத்தினி" என அழைக்கப் பட்டனர். இதனால் தவவலிமையினராகிய கவுந்தியடிகள் கண்ணகியைப் பத்தினி என்று அழைத்ததை அறிய முடிகிறது.

### சிலப்பதிகாரத்தில் கண்ணகி வழிபாடு

கோவலன் வெட்டுண்டு இறந்தபின் பாண்டிய நாட்டில் மழை இல்லாது போயிற்று அதனால், வறுமையும் நோயும் அதிகரித்தன. அது அறிந்த கொற்கை நகரத்து அரசனாகிய இளஞ்செழியன் பத்தினிக் கடவுளுக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டு களவேள்வியல் சாந்தி செய்து விழா எடுத்ததால் அந்த நாட்டில் மழை மிகவும் பெய்தது. முற்கூறிய வறுமையும் நோயும் நீங்கின. அதனைக்கேள்வியுற்று கொங்கு மண்டலத்தரசரும், இலங்காபுரத்து இராசனாகிய கயவாகுவும் கண்ணகிக்குக் கோயில் கட்டி நித்தியா பூசை, விழா முதலியவற்றைச் செய்து வழிபட அவர்களின் நாடுகள் மிகுந்த வளமுற்றன, என்பதை சிலப்பதிகாரத்தில் உரைபெறும் பதிகத்தின் வழி அறியமுடிகிறது. இவ்வாறாக கண்ணகி யைப் பத்தினிக் கடவுளாக மன்னர்களும் மக்களும் வழிபடத் தொடங்கினர் என்பதை அறியமுடிகிறது. இதைப்போன்றே சீதை, தாரை, மண்டோதரி, குந்தி பாஞ்சாலி ஐவரும் பஞ்சகன்னிகள் என்று வடமொழி இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர். அருந்ததி, உலோபாமுத்திரை, மேனை, சுந்தி, சாவித்திரி ஆகியோரைப் பத்தினிகளாக அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது. (அபிதான சிந்தாமணி – ப.323) சிலப்பதிகா ரத்தில் கண்ணகி பத்தினியாக வழிபடப் படுவதை உரைபெறு கட்டுரை தமக்கு தெளிவாக விளக்குகிறது.

### கேரளத்தில் கொடுங்கலூர் பகவதி – கண்ணகி வழிபாடு

கேரளநாட்டுக் கோவலன்கதை கண்ணகி பகவதியாக மாறியதைக் குறிக்கிறது. மதுரையை எரித்த கன்னகை சொக்கர் வாசலில் நின்று நிலைதருக என வேண்டினாள். அப்போது சொக்கர். 'நீதான் நிற்க இடமில்லாமல் மதுரையை எரித்து விட்டாயே. அதனால் இனிமேல் நீ.

மலையாள தேசமெல்லாம் பகவதியாய்
போயிரென்றார்

பாக்கமடிச் சீமையெல்லாம் பாராண்டு
நீயிரடி

என்று வரம் கொடுத்தார். கன்னகை மதுரைத் தெற்குக்கோட்டை வாசல் விட்டு சிக்கத்தர் மலை கடந்து, சாத்தூர், சங்கர நயினார் கோயில், குத்தாலம் ஆகிய இடங்க ளைக் கடந்து, ஆரியங்காலை அடைந்தாள். அங்கு வந்தடைந்த ஐயரைத் தெண்டனிட் டாள். சொக்கர் சொன்ன உத்தரவை ஐயருக்குக் கூறினாள். பாலக்காடு தேசத்தைப் பாராண்டு கொள்ளச் சொன்ன பல வரங்களைக் கொடுத்தார். அங்கிருந்து மலையாளம் வந்த கன்னகை, மாகாளியின் உருவங் கொண்டு மனிதர்ரைப் பிடித்து உண்டாள். அதைக்கண்ட மந்திரியும் அரசனும் காளியுடன் ஆலோசித்து காளியுடைய கோயிலுக்கும் காளிக்கும் விழா நடத்தச் சொன்னாள் சுற்றியுள்ள தேவதைக் கும் படையல் போட்டுக் கொடுக்கச் சொன்னாள். பட்டிகளில் பொங்கல் இடச் சொன்னாள் என்று கோவலன் கதை கூறுகிறது. மேலும் சேரநாட்டில் (கேரளம் தெய்வமாக்கப் பெற்ற கண்ணகி பகவதியானதைச் சுவடி ஒன்று குறிக்கிறது.) என்பதின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

### மங்களதேவிக் கோயில்

'மங்களதேவிக் கோயில் மங்கலதேவி மலையில் பேரியாற்றங்கரைக்குப் பக்கத்தில் இருக்கிறது. சிலப்பதிகார வருணனைப்படியே இக்கோயில் இன்றும் மாறுபடாது இருக்கிறது இக்கோயிலே சேரன் செங்குட்டு வன் பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்கு எழுப்பிய முதற் கோயிலாகும். இன்றுள்ள சிலைகளும் கூடங்களும் காலந்தோறும் திருப்பணி

செய்த மன்னர்களால் புதுப்பிக்கப்பட்டிருக் கின்றன" என்று டாக்டர் துளசி இராமசாமி குறிப்பிட்டுள்ளார். (மங்கல தேவி கண்ணகிக் கோட்டம் ப.90)

இக்கோயில் கேரள எல்லையில் உள்ளதா தமிழகத்தின் எல்லையில் உள்ளதா என்ற சிக்கல் இன்னும் தீர்க்கப்படாமேலே இருக்கிறது. 1997ஆம் ஆண்டிலிருந்து கேரள அரசு தமிழக அரசு ஆகிய இரு காவல் துறையினரின் பாதுகாப்போடு சித்திரை முழுநிலவு வழிபாடு கண்ணகி கோட்டத்தில் நடக்கிறது. கேரளத்தில் பெண் தெய்வங்க ளுக்கும் பகவதி என்ற பெயர் உள்ளது. கொடுங்களுரில் பகவதி ஒற்றை முலைச்சியம் மன் என்று அழைக்கப் பெறுகிறாள். இக்கோயில் கேரளாவில் பெரிய கோயிலாக மதிக்கப்படுகிறது. இந்தப் பகவதியே மூத்த பகவதியாகப் போற்றப்படுகிறாள். பங்குனி மாதத்துப் பரணி நாளில் இப்பகவதிக்குப் பலிகள் கொடுத்து விழா கொண்டாடப் படுகிறது. விஷாரிகாவு என்ற இடத்திலுள்ள பகவதி கோயில், இளைய பகவதி கோயிலாகப் போற்றப்படுகிறது. விஷாரிகாவு பகவதி கோயிலில் ஆடுகளை வெட்டி நவதானியங்களோடு கலந்து குருசியாக்கிப் பலியிடுவது வழக்கம். இந்தப் பலியை இரவு பதினோரு மணிக்குக் கொடுப்பார்கள். விஷாரிகாவில் இருக்கும் இளைய பகவதி பலியை ஏற்றுக்கொண்டு ஆடுவாள். அந்த நடுஇரவில் கொடுங்கோலூரில் உள்ள மூத்தபகவதி கோயிலிலுள்ள கிணற்றின் வழியாக வந்து இளைய பகவதியுடன் ஆடுவதாக நம்பப்படுகிறது (பி.எல்.சாமி. தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு ப.114 – 155)

## முடிவுரை

இவ்வாறாகச் சிலப்பதிகாரத்தில் மானுடப் பெண் கண்ணகி பத்தினியான பின்பு கேரளத்தில் பகவதியானதை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் சங்க காலத்தில் பெருமளவில் இல்லாத தாய்த்தெய்வ வழிபாடு சிலப்பதிகாரத்திற்கு பிறகு நிறைந்த பெண்தெய்வங்களாக ஊர்தோறும் வெவ்வேறு பெயர்களில் என்று பல பெண் தெய்வங்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது, என்றால் மிகையாகாது. ஊதார மாக மாரியம்மனாக, அங்காலம்மனாக, வட்டபுரியம்மனாக, வஞ்சியம்மனாக என்று பல பெண்தெய்வங்கள் உள்ளன. அவற்றிற் கான கரணங்களில் பலவும் கண்ணகிக் கதையோடும் வழிபாடோடும் பொருந்திருப் பது குறிப்பிடத்தக்கது.

Acknowledgement Author Would Like To Thank The Management Of Nallamuthu Gounder Mahalingam College, Pollachi For Financial Assistance Through SEED MONEY Support.

## துணைநூற்பட்டியல்

1. அடியார்க்கு நல்லார். சிலப்பதிகாரம், கேசவர் அச்சுக்கூடம், சென்னை, 1927.
2. புலியூர்கேசிகன். சிலப்பதிகாரம். சாரதா பதிப்பகம், ஜீ-4சாந்தி அடுக்ககம், கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை – சென்னை -600014, முதல்பதிப்பு- 2011.
3. புலியூர்கேசிகன். தொல்காப்பியம், பாரி நிலையம், சென்னை, 2012.
4. வேங்கடசாமி நாட்டார், ந,மு. சிலப்பதிகாரம். ராமையா பதிப்பகம், ஜீ-4 சாந்தி அடுக்ககம், கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை - 600014. முதல்பதிப்பு -2008.
5. கழகத் தமிழகராதி, திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
6. பி.எல் சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை- 600098. மு.ப 1975.
7. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ஆசியன் எஜீகேசன் சர்வீநஸ், நீயூடெல்லி,
8. பாலசுப்பரமணியன் குழு, குறுந்தொகை, நியூ சென்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், 41 பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600098
9. டாக்டர் துளசி இராமசாமி, மங்கல தேவி கண்ணகிக் கோட்டம், கண்ணகி வழிபாடு, ஒளிப் பதிப்பகம், 63, டாக்டர் ரங்காச்சாரி சாலை, சென்னை – 600018, மு.ப.2003.
10. முனைவர் சாரதா இராசகோபாலன், கண்ணகி வழிபாடு, ஒளிப் பதிப்பகம், 63, டாக்டர் ரங்காச்சாரி சாலை, சென்னை – 600018, மு. ப. 2003.